வரிசை எண்./Serial No.

10000027

**2016**

பொது அறிவு

GENERAL STUDIES

(தமிழ் மற்றும் ஆங்கில வடிவம்)

(Tamil & English Version)

நேரம் : 3 மணி | மொத்த மதிப்பெண் : 300

Duration : 3 Hours | Max. Marks : 300

விண்ணப்பதாரார்களுக்கான பொது குறிப்புகள்:

General Instructions to the Candidates:

i) வினாக்கள் பட்டப்படிப்பு தரத்திலும், விரிவாக விடையளிக்கும் வகையிலும் உள்ளது.
This Question Papers is descriptive type in Degree Standard.

ii) வினாத்தாளானது தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்களில் உள்ளது. ஏதேனும் சந்தேகம் இருப்பின், ஆங்கில வடிவில் தரப்பட்டுள்ள குறிப்புகளே முடிவானது.
The Question Paper is printed in Tamil and English version. In all matters and in cases of doubt English Version is final.

iii) இத்தேர்வை பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்கோ மற்றும் பிழையில்லாமல் எழுதியதற்காகவோ தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.
There is no reservation on marks for neatness of execution and correctness of spelling in respect of this paper.

பிரிவு - அ

Section – A

(மிகச் சிறிய அளவில் விடையளிக்கும் வினா வகை)

(Very Short Answer Type)

குறிப்பு: i) 30 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்

Note : Answer not exceeding 30 words.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று மதிப்பெண்கள்

Each question carries three marks.

iii) கொடுக்கப்பட்டுள்ள முப்பத்தைந்து வினாக்களில் எவையேனும் முப்பது வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

Answer any thirty questions out of thirty five Questions.

(30 × 3 = 90)

1. ஜெட்-உந்தல் ஆகாய ஊர்தி வளிமண்டல பகுதியில் மட்டுமே வேலை செய்யும் ஏன்?
A jet-propelled air-craft can work only in atmospheric region. Why?

2. நீரானது கண்ணாடி தகடுடன் ஒட்டுவது போன்று பாதரசம் ஏன் ஒட்டுவதில்லை?
Water wets the glass surface while mercury does not. Why?

3. கண்களின் பொதுவான குறைபாடுகளை எழுதுக. மேலும் அவற்றை நிவர்த்தி செய்யும் வில்லைகளையும் கூறுக.
Write the common defects of vision and the lenses used to rectify them.

4. உலோகவியியலில் பார்க்ஸ் முறையை பற்றி குறிப்பு எழுது.
Write a note on Parke's Process in metallurgy.

5. லூயி அமிலம் மற்றும் காரம் வரையறு.
Define Lewis acid and base.

6. செல்லின் செயல்களைக் கட்டுப்படுத்தும் பாகம் எது? அது அவ்வாறு அழைக்கப்படும் காரணம் யாது?
What is called as the controlling centre of the cell? Why is it called so?

7. “இன்டிரான்ஸ்”-ன் உயிரியல் முக்கியத்துவம் என்ன?
Write the biological importance of “Introns”.

8. வறண்ட நிலத் தாவரங்கள் தங்களை எவ்வாறு வறட்சிக்கு தகவமைத்துக் கொள்கின்றன?
How do the xerophytic plants adapt themselves to drought condition?

9. இதயத்தில் சைனு-ஆரிக்குலர் கணு எங்கு உள்ளது? அது இதயத்தின் இயக்கி என்று ஏன் அழைக்கப்படுகிறது?
Where is the sinoatrial node located in the heart? What is it called the Pacemaker?

10. மனிதனின் இரத்தத் திசுவினை வகைப்படுத்துக.
Classify Vascular tissues in human.

11. B2B அமைப்பு என்றால் என்ன?
What is a B2B system?

12. கணினி மென்பொருள் என்றால் என்ன? சுருக்கமாக எழுதுக.
What do you mean by computer software? Briefly explain.

13. சிறுபான்மையினரின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பிரதம மந்திரியின் புதிய 15 அம்ச திட்டத்தின் ஏதேனும் மூன்று குறிக்கோள்களை குறிப்பிடுக.
State any three objectives of Prime Minister’s New 15 Point Programme for the welfare of minorities.

14. சேன்ட் கல்யாணி திட்டத்தின் குறிக்கோள் யாது?
What is the objective of Cent Kalyani Scheme?

15. உணர்வுபூர்வமான வசை என்றால் என்ன?
What is emotional abuse?

16. ‘சுவவாவ்லம்பன் அபியான்’ (சுயநம்பிக்கை இயக்கம்)-என்பதின் குறிக்கோள் யாவை?
What are the aims of ‘Swavavlamban Abhiyaan’ Scheme?

17. உணவு பாதுகாப்பு உரிமை சட்டம் 2013-ன் முக்கிய சிறப்பியல்புகள் யாவை?
What are the key features of Right to Food Security Act 2013?

18. ‘மித்ரா செயலியின்’ முக்கியத்துவத்தை பற்றி விவாதிக்க.
Discuss the significance of ‘Mitra App’.

19. E-அரசின் ஏதேனும் மூன்று பயன்களைப் பட்டியலிடுக.
List any three benefits of E-governance.

20. தமிழ்நாட்டில் பல்வேறு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் நேரடியாக பயன் அடைபவர்கள் யாவர்?
Who are the direct beneficiaries of various Pension schemes in Tamil nadu?

21. மிதவை கடன் என்றால் என்ன?
What is floating debt?

22. தமிழ்நாட்டில் செயல்படும் முக்கிய பெரிய அளவிலான தொழிற்சாலைகளின் பெயர்களை குறிப்பிடவும்.
Name the important large scale industries in Tamil Nadu.

23. 2015-16இல் சிவகங்கை மாவட்டத்தின் ‘பள்ளிச்சந்தைத் திடல்’ செய்திகளில் வெளிவந்தது ஏன்?
Why was ‘Pallisanthai Thidal’ of Sivaganga District in news during 2015-16?

24. தமிழ்நாட்டின் THAI திட்டம்-கோடிட்டு காட்டு.
THAI Scheme of Tamil Nadu-Outline.

25. டாக்டர் சாரதா மேனன் என்பவர் யார்? சமீபத்தில் இவர் பெற்ற அங்கீகாரம் என்ன?
Who is Dr.Sarada Menon? Why was she in the limelight recently?

26. டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்களின் இலக்கியப் பங்களிப்பு பற்றி எழுதுக.
Write about the literary contributions of Dr. A.P.J. Abdul Kalam.

27. கெப்ளர் 452பி என்றால் என்ன?
What is Kepler 452B?

28. ‘பரத்வானி’ போர்டலின் அம்சங்கள் பற்றி சிறுகுறிப்பு வரைக.
Write briefly on the features of the ‘Bharatavani’ Portal.

29. அறிவியல் அறிஞர்களுக்காக பாரத பிரதமரால் கூறப்பட்ட 5Es என்னென்ன?
What are 'Five Es' mantra for scientists given by Prime Minister of India?

30. இருதயநாத் மங்கேஷ்கர் விருது 2016ஐ பெற்றது யார்? எதற்காக இது வழங்கப்பட்டது?
Who is the recipient of Hridaynath Mangeshkar Award, 2016? Why was he/she conferred the award?

31. ஏப்ரல் 2016ல் குர்கான் பெயர் மாற்றம் பெற்றது குறித்து எழுதுக.
Gurgaon was renamed in April 2016. Write a note on it.

32. கீழ்க்கண்ட மூன்றினை விரிவுப்படுத்துக.
(அ) AERB
(ஆ) NPCIL
(இ) FDL
Expand the following three terms:
(a) AERB
(b) NPCIL
(c) FDL

33. 2016-ம் ஆண்டு மத்திய அரசால் துவங்கப்பட்ட "சூர்ய ஜோதி" திட்டத்தின் முக்கியத்துவம் பற்றி சுருக்கமாக விவரி?
Briefly explain the significance of solar jyoti launched by the Union Government in 2016.

34. 'டோகிரி' என்பது என்ன?
What is 'Dogri'?

35. 'உமாங்க்' பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
Write a brief note on 'UMANG'

பிரிவு - ஆ

Section – B

(சுருக்கமாக விடையளிக்கும் வினா வகை)

(Brief Answer Type)

குறிப்பு: i) 120 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்

Note : Answer not exceeding 120 words.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் எட்டு மதிப்பெண்கள்

Each question carries eight marks.

iii) கொடுக்கப்பட்டுள்ள பதினெட்டு வினாக்களில் எவையேனும் பதினைந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

Answer any Fifteen Questions out of Eighteen Questions.

(15 × 8 = 120)

36. மின்மாற்றியில் ஏற்படும் ஆற்றல் இழப்புகளை விளக்குக.
Explain the energy losses that occur in a transformer.

37. கீழ்க்கண்ட கார்பைடுகளை விளக்கி உதாரணம் தருக.
(அ) அசிட்டிலைடு, (ஆ) மீத்தனைடு, (இ) அலிலைடு (ஈ) கலப்பின கார்பைடு
Explain the following carbides with suitable examples.
(a) Acetylide, (b) Methanide, (c) Allylide, (d) Mixed carbride.

38. "உயிர்புவி இரசாயன சுழற்சி" என்றால் என்ன? கார்பன் சுழற்சியை விளக்குக.
What is a biogeochemical cycle? Explain carbon cycle.

39. 'உயிர் பல்லுயிர் தன்மைமிக்க இடம்' என்றால் என்ன? கார்பன் சுழற்சியை விளக்குக.
What are biodiversity hotspots? How they are conserved?

40. போதைக்கு அடிமையாதலை சமாளிக்க உளவியல் சிகிச்சை மற்றும் 'ஆற்றுப்படுத்துதல்' முறையின் பங்களிப்பை விளக்குக.
Describe the role of counselling and psychotherapy in managing drug addiction.

41. இயந்திரமனிதவியல் என்றால் என்ன? அதன் பயன்பாடுகளை பட்டியலிடவும்
What is robotics? List the applications.

42. தொலையுணர் ஆய்வில் மேற்கொள்ளப்படும் பல்வேறு வகை பண்பறி திறன்களை விளக்குக.
Explain the various types of resolutions involved in remote sensing.

43. சிறுபான்மை சமுதாயத்தை சார்ந்த மாணவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள மத்திய அரசால் வழங்கப்படும் வெவ்வேறு உதவித் தொகை திட்டங்களை விளக்குக.
Explain the different centrally sponsored scholarship scheme for students belonging to the minority communities.

44. பாலின சமத்துவம் என்றால் என்ன? பாலின சமத்துவத்தை எவ்வாறு அடைவது?
What is gender equality? How can gender equality be achieved?

45. இந்தியாவின் இனவாதத்தை கட்டுப்படுத்துவதில் தேசிய ஒருமைப்பாட்டு குழுவின் பங்கினை மதிப்பிடுக.
Estimate the role of National integration Council in controlling communalism in India.

46. பள்ளிகளில் செய்தி மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதில் தமிழக அரசின் முயற்சிகளை விளக்குக.
Explain the efforts of Government of Tamil Nadu in introducing Informaion and Communication Technology in schools.

47. தமிழ்நாடு அரசு சுகாதார துறையின் “பார்வை 2023” என்பது பற்றி குறிப்பு எழுதுக.
Write a note on the Health Sector’s, “Vision 2023” of Government of Tamil Nadu.

48. இந்தியா ஜெர்மனி இடையே கையெழுத்தான நமாமி கங்கை திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் முக்கியத்துவத்தை எழுதுக.
Write down the objective and importance of Namami Ganga Programme signed by India and Germany.

49. தமிழ்நாடு அரசின் சிமெண்ட் மானிய திட்டம் பற்றி எழுதுக.
Write about the subsidised Cement Schemes of Government of Tamil Nadu.

50. ஏப்ரல் 5, 2016 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட காட்டிமான் விரைவு வண்டி பற்றி எழுதுக.

Write about the Gatimann Express which was flagged off on April 5, 2016.

51. தமிழக சட்டமன்ற தேர்தல், 2016-ல் நோட்டாவின் பங்கினை விவாதி.
Discuss the role of NOTA in Tamil Nadu Assembly Elections 2016.

52. 2016-ல் MOEFCC அறிவித்த e-கழிவு மேலாண்மை சட்டத்தின் முக்கியத்துவத்தை பட்டியலிடுக.
List out the highlights of the e-Waste Management Rules of 2016, notified by MOEFCC.

53. இந்தியாவின் முதல் கடற்சார் உச்சி மாநாடு எங்கு, எப்போது நடைபெற்றது? அதில் விவாதிக்கப்பட்ட கருப்பொருள் மற்றும் திட்டங்கள் பற்றி விவாதி.
Where and when was the First Maritime Summit held in India? What were the various themes and projects discussed in it?

பிரிவு - இ

Section – C

(விரிவாக விடையளிக்கும் வினா வகை)

(Detailed Answer Type)

குறிப்பு: i) 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்
Note : Answer not exceeding 250 words.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் பதினைந்து மதிப்பெண்கள்
Each question carries *Fifteen* marks.

iii) கொடுக்கப்பட்டுள்ள மூன்று வினாக்களில் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
Answer any Two Questions out of Three Questions.

(2 × 15 = 30)

54. போலியோமைலிட்டிஸ் உண்டாக்கும் கிருமி, பரவும் முறை, அறிகுறிகள் மற்றும் தவிர்க்கும் முறை பற்றி விளக்குக.
Explain the pathogenesis, mode of transmission, symptoms and prevention of Poliomyelitis.

55. மனித உரிமைகள் பிரச்சனை தொடர்பாக ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் பங்கு பணியினை ஆராய்க.

Examine the role of UNESCO in relation to Human Rights Issues.

56. 2016-ல் மூன்றாவது புலி பாதுகாப்புக்கான ஆசியா நாடுகளின் அமைச்சக கூட்டத்தின் முடிவுகள் என்ன?

What was the outcome of the Third Asia Ministerial Conference, 2016 on Tiger Conservation?

பிரிவு - ஈ

Section – D

Essay

(கட்டுரை வினா வகை)

குறிப்பு: i) 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்

Note : Answer not exceeding 500 words.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் முப்பது மதிப்பெண்கள்

Each question carries *Thirty* marks.

iii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு வினாக்களில் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு குறைந்தபட்சம் ஒரு வினாவை ஒவ்வொரு பிரிவிலிருந்து தேர்ந்தெடுத்து விடையளிக்கவும்.

Answer any two out the four questions given below attending atleast one question from each Part.

(2 × 30 = 60)

**PART - A**

57. இந்தியாவில் பெண்களின் நிலை உயர உதவும் அரசின் சமூக பாதுகாப்பு திட்டங்கள் மற்றும் அரசு கொள்கைகளைப் பற்றி விளக்குக.

Explain in detail the various social security programmes and government policies to elevate the status of women in India.

அல்லது

Or

58. கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ் நாட்டில் மின்துறை எதிர்கொள்ளும் சவால்களை விவரி.

Discuss the issues faced by the power sector in Tamil Nadu in recent decades.

## PART - B

59. கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்த மத்திய அரசு மேற்கொண்டிருக்கும் திட்டங்கள் பற்றி விவரிக்கவும்.

Give details of the Central Government's Schemes to improve rural economy.

அல்லது

Or

60. தமிழகத்தில் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் (SEZs)பற்றி சிறப்பு குறிப்புடன் ஒரு கட்டுரை வரைக.

Write an essay on Special Economy zones (SEZs) with special reference to Tamil Nadu.